**நெல் மற்றும் தானியம், சேதன உணவு, மரக்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை, விதைகள் உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு**

**யாழ்ப்பாணம் மட்டுவில் விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் வியாபாரம் செய்வதற்காக வாடகையில் அறையினை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்**

விவசாயப் பொருட்களுக்கு பொருத்தமான விலையைப் பெறுவதற்கும் நுகர்வோருக்கு குறைந்த விலையில் பொருட்களை வழங்குவதற்குமாக பொருளாதார மத்திய நிலையமானது மட்டுவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள அறைகளை வாடகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பொருளாதார மத்திய நிலையமானது பின்வரும் வசதிகளைக் கொண்டுள்ளது.

1. வியாபாரம் செய்யக்கூடிய 20 அறைகள்.
2. வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான வசதிகள்
3. மின்சாரம், நீர், சுகாதார வசதிகள்.

**பொதுவான நிபந்தனைகள்**

1. ஒருவருக்கு ஒரு அறை மட்டுமே வழங்கப்படும்.
2. மட்டுவிலுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் A1 இலிருந்து A10 வரையுமானதும் B1 இலிருந்து B10 வரையுமானதுமான 20 அறைகள் வாடகைக்கு விடப்படவுள்ளன.
3. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் Security க்காக மீளச் செலுத்தப்படாத 12 மாத வாடகைப் பணம் நிர்வாகத்தினரிடம் செலுத்தப்பட வேண்டும்.
4. ஒரு அறைக்கான மாத வாடகை 8000.00 ரூபா ஆகும்.

இது சம்பந்தமான விண்ணப்பங்கள் **2021ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 06ம் திகதி தொடக்கம் செப்டெம்பர் மாதம் 21ம் திகதி** வரையுள்ள காலப்பகுதியில் **மு.ப9.00 மணி தொடக்கம் பி.ப2.00** மணிவரை யாழ்ப்பாண மாவட்டச் செயலக பெறுகை அலகில் (அறை இல 42) மீளளிக்கப்படாத தொகை ரூபாய் 500.00 இனை செலுத்தி பெறப்படல் வேண்டும்.

பூரணப்படுத்திய விண்ணப்பங்கள் **2021ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22ம் திகதி அல்லது** அதற்கு முன்பதாக **செயலாளர், நெல் மற்றும் தானியம், சேதன உணவு,** மரக்கறிகள், **பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை, விதைகள் உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு, 80/5 கொவிஜன மந்திரய, ரஜமல்வத்த, பத்தரமுல்ல** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெறும் விண்ணப்பதாரிகளின் ஆரம்பத் தகவல்கள், அவர்களின் வியாபார அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகள் நேர்முகப்பரீட்சை மூலம் தீர்மானிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர். விண்ணப்பதாரிகளின் தெரிவு சம்பந்தமான இறுதி

தீர்மானம் நெல் மற்றும் தானியம், சேதன உணவு, மரக்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை, விதைகள் உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சினால் எடுக்கப்படும்.

இவ்விடயம் தொடர்பாக மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் விவசாய அமைச்சின் அபிவிருத்தி பிரிவின் 011-203 4300 என்னும் இலக்கத்துடன் அல்லது யாழ்ப்பாண மாவட்டச் செயலக விவசாயப்பிரிவின் 021 – 221 9993 என்னும் இலக்கத்துடன் அல்லது யாழ்ப்பாண மாவட்டச் செயலக பெறுகை அலகின் 021-222 4633 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**செயலாளர்,**
நெல் மற்றும் தானியம், சேதன உணவு, மரக்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை, விதைகள் உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு,
80/5, கொவிஜனமந்திரய,
ரஜமல்வத்த அவனியு,
பத்தரமுல்ல